# சைதை துரைசாமியின்
# மனிதநேயம் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்
# இலவச பயிற்சி மைய மாணவர்களின் கவனத்திற்கு...

**மனிதநேய மையத்தில் சேர்ந்து, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் படிக்க விரும்பும் மாணவர்கள், கீழ்க்கண்ட நடைமுறைகளைக் கடைபிடித்தால் வெற்றி என்ற உங்கள் நோக்கம் எளிதில் நிறைவேறும். ஆர்வமும், புத்திசாலித்தனமும், நினைவாற்றலும், சுறுசுறுப்பும் எப்பொழுதும் இருந்தால் வெற்றி சுலபம். அந்த வெற்றியைப் பெறுவதற்கு ஆரோக்கியம் அவசியம்.**

- அன்றாடம் தூங்கி எழுந்து காலைக்கடன்களை முடித்தவுடன், எல்லா செய்தித்தாள்களையும் ஆங்கிலம், தமிழ், வாராந்திர பத்திரிக்கைகளை கவனமாகப் படிக்க வேண்டும். செய்திகளின் தலைப்பு குறித்தும், அந்தச் செய்தி, எந்தப் பத்திரிக்கை, எந்தப் பக்கத்தில் என்று தேதிவாரியாக குறித்துக்கொள்ள வேண்டும். அதேபோல், அந்தச் செய்தி பக்கங்களை, செய்தித்தாளில் இருந்து வெட்டி தனியாக ஆல்பம் போல் தேதி வாரியாக தயாரித்துக்கொள்ள வேண்டும். இந்தப் பணிகளை வீட்டிலுள்ள பெற்றோர்கள், சகோதர-சகோதரிகள் கூட மேற்கொள்ளலாம். (செய்தித்தாள்களில் எந்தெந்தச் செய்திகளைப் படிக்க வேண்டுமென்ற குறிப்பு இணைக்கப்பட்டுள்ளது)

- NCERT (National Council for Educational Research and Training) புத்தகங்கள், 6ஆம் வகுப்பில் இருந்து 12ஆம் வகுப்பு வரை உள்ள வரலாறு, புவியியல் (History, Geography) இரண்டு புத்தகங்களையும் அனைத்துப் பிரிவு எடுப்பவர்கள், கண்டிப்பாக படிக்க வேண்டும். விருப்பப் பாடத்தில் 11, 12ஆம் வகுப்பு புத்தகங்களையும் படிக்க வேண்டும். உதாரணமாக, Commerce, History, Geography, Sociology பிரிவு எடுப்பவர்கள் 11, 12ஆம் வகுப்பு Commerce, History, Geography, Sociology பாடப்புத்தகங்களை படிக்க வேண்டும். இந்தப் புத்தகங்களை தவறாமல் நன்கு புரிந்து மனப்பாடம் செய்ய வேண்டும்.

- அன்றாடம் வகுப்பில் ஆசிரியர் பாடம் எடுக்கும்பொழுது குறிப்பெடுக்கின்ற வழக்கத்தையும், கவனச் சிதறல் இல்லாமல் உண்ணிப்பாக பாடம் எடுப்பதை கவனிப்பதையும் வழக்கமாக்கிக்கொள்ள வேண்டும். அன்றாடம் நடத்துகின்ற பாடத்தை அன்றே படித்து முடித்துவிட வேண்டும். புரிந்து படித்து மனப்பாடம் செய்ததை, ஒருமுறையாவது எழுதி பார்க்க வேண்டும். அன்றாடம் தொடர் பாடங்களை படித்துவிட்டால், தேர்வு நேரங்களில் சிரமம் இருக்காது.

- நடப்பு நிகழ்வுகளுக்கு (Current Affairs) 50 சதவிகித மதிப்பெண்ணும், NCERT 6ஆம் வகுப்பில் இருந்து 12ஆம் வகுப்பு வரை வரலாறு, புவியியல், இந்திய அரசியலமைப்பு (History, Geography, Polity) பாடங்களுக்கு 40 சதவிகித மதிப்பெண்ணும், கணக்கு (Mathematics) மற்றும் பொருளாதாரத்துக்கு (Economics) 10 சதவிகித மதிப்பெண்ணும் கிடைக்கும். மேற்கண்ட பாடத்திட்டத்தில் இவ்வளவு சதவிகித மதிப்பெண்கள் பெற வாய்ப்பிருப்பதால், இதனை கவனத்துடன் படிக்க வேண்டும்.

- எதிர்பாராத விதமாக ஒருநாள் வகுப்பிற்கு வர முடியாத சூழ்நிலை ஏற்படுமேயானால், சக மாணவர்களிடத்தில் அன்றைய தினம் எடுக்கப்பட்ட பாடங்களை முழுவதுமாக அறிந்துகொள்ள வேண்டும். அதில் ஏதாவது சந்தேகம் இருந்தால், ஆசிரியர்களிடத்தில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

- நூலகங்களுக்குச் சென்று படிக்கின்ற பழக்கத்தையும், அல்லது நல்ல புத்தகங்களை நூல்நிலையங்களில் இருந்து பெற்று படிக்கின்ற பழக்கத்தையும் தொடர் நிகழ்வாகச் மேற்கொள்ள வேண்டும்.

- மாணவர்கள் குழு விவாதம் (Group study) பழக்கத்தினை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

- ஆல் இந்தியா ரேடியோவில், இரவு 9.00 மணிக்கு ஆங்கில செய்தி, அதனைத் தொடர்ந்த செய்தி விவாதத்தினையும் நாள் தவறாமல் தொடர்ந்து கேட்க வேண்டும்.

- D.D., NDTV, BBC செய்தி சேனல்களை தொடர்ந்து பார்க்க வேண்டும்.

- I.A.S. என்பது ஆட்சித்துறை பணிக்கான அடையாள குறிப்பீடு மட்டுமல்ல. I- Integrated, A-Approach, S-Specialist., அதாவது, ஒருங்கிணைந்து படிக்கும் நிபுணர் என்ற வகையில் நினைவில் நிறுத்திப் படிக்க வேண்டும். I.A.S. ஆனவுடன் உன்னுடைய சிந்தனைகளும், செயல்பாடுகளும் "I am **A**lways **S**imple" என்பதாக இருக்க வேண்டும். அதுதான் ஒரு சிறந்த உயரதிகாரியின் பண்பு.

- படிக்கின்றபொழுது தன்னம்பிக்கையுடனும், நல்லொழுக்கத்துடனும் இந்தப் படிப்புதான் என்னுடைய எதிர்கால நோக்கத்தையும், என்னுடைய குடும்ப உறுப்பினர்களின் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்யக்கூடியது என்பதை உணர்ந்தும், மனிதநேயத்தினுடைய நோக்கத்தை முற்றிலுமாக உணர்ந்தும், இந்தச் சமூகத்திற்கு எனது நேர்மையான நிர்வாகத்திறனை கொடுக்கின்ற ஒரு அதிகாரியாக வர வேண்டும் என்ற சிந்தனையை உணர்ந்தும், ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் இந்தச் சிந்தனை மாறாமல் படிக்க வேண்டும்.

**சைதை. சா.துரைசாமி**
தலைவர்
மனிதநேயம் ஐஏஸ், ஐபிஎஸ் இலவச பயிற்சி மையம்,
சென்னை-600 035.
044-2435 8373, 99406 70110, 98401 06162